


மதுரையில் கழக தகவல் தொழில்நுட்ப அணி மதுரை மண்டல ஆய்வு கூட்டம் மற்றும் ஆலோசனைக் கூட்டம் மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் தலைமையில் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., முன்னிலையில் நடைபெற்றதில் மாநில தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர், தமிழ்நாடு தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா சிறப்புரையாற்றினார். உடன் மாநில இணைச் செயலாளர் மகேந்திரன், துணை செயலாளர்கள் நவீன், சுரேஷ், விஜய் கதிரவன், ஸ்ரீதர், பாலா அணி ஆலோசகர் கோவை லெனின், மதுரை மண்டல பொறுப்பாளர் பாசபிரபு, சட்டமன்ற உறுப்பினர்கள் கம்பம் ராமகிருஷ்ணன், ஆண்டிபட்டி மகாராஜன், பெரியகுளம் சரவணகுமார் மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளிட்ட திரளானோர் பங்கேற்றனர்.

### திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டங்களில் உள்ள

## ஏழு சட்டமன்றத் தொகுதிகளிலும் பூத் கமிட்டி அமைக்கும் பணி!

### மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர் அர.சக்கரபாணி – இ.பெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

திண்டுக்கல், டிச. 18 -

திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அர.சக்கரபாணி, கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டத்திலுள்ள ஏழு சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட ஒவ்வொரு வாக்குச்சாவடிகளுக்கும் பூத் கமிட்டி (BLC) அமைக்கும் பணியினை தொடங்கிடவேண்டும். பூத் கமிட்டியானது 100 வாக்காளர்களுக்கு ஒரு வாக்குச்சாவடி குழு உறுப்பினர் என்ற அடிப்படையில் அமைக்க வேண்டும். உதாரணமாக ஒரு வாக்குச்சாவடியில் 700 வாக்காளர்கள் இருப்பின் ஒரு BLA2 தவிர 7 பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) இருக்க வேண்டும். 1100 வாக்காளர்கள் இருப்பின் ஒரு BLA 2 தவிர 11 பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) இருக்கவேண்டும். பூத் கமிட்டி உறுப்பினர்களை (BLC) மேலாண்மை செய்யும் பொறுப்பு BLA2வுக்கானது





என்பதால் அவர்களுக்கு 100 வாக்காளர்கள் வழங்கப்படக் கூடாது.

தங்களுக்குரிய 100 வாக்காளர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருப்பது, அரசின் நலத்திட்டங்களை தங்களுக்குரிய 100 வாக்காளர்களிடம் கொண்டு சேர்ப்பது, தேர்தல் நாளன்று அவர்களை வாக்குச்சாவடிக்கு அழைத்து வருவது வரையிலான பணிகளை பூத் கமிட்டியைச் (BLC) சேர்ந்தவர் மேற்கொள்ளவேண்டும் என்பதால் தகுதியானவர்களை தேர்ந்தெடுத்து பூத் கமிட்டியில் இணைக்க வேண்டும். ஒரே குடும்பத்தில் ஒருவர் மட்டுமே பூத் கமிட்டியில் இடம்பெற வேண்டும். வாக்குச்சாவடி குழுவில் கட்டாயம் ஒரு இளைஞர் அணி, மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணியினர் இருக்க வேண்டும்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது 20 முதல் 25 ஆயிரம் வாக்காளர்களுக்கு ஒரு பொறுப்பாளர் நியமிக்கப்பட்டிருந்தனர். அப்பொறுப்பாளர்களையும், BLA 2க்களையும் உடன் வைத்துக் கொண்டு 20 ஆயிரம் முதல் 25 ஆயிரம் வாக்காளர்களுக்கு உட்பட்ட வாக்குச்சாவடி உறுப்பினர்களை நேரில் அழைத்து அவர்களிடம் தொகுதி பார்வையாளர்கள் முழுமையாக சரிபார்க்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இப்பணிக்கு தொகுதி பார்வையாளர்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் ஒரு BLA2, 100 வாக்காளர்களுக்கு ஒரு பூத் கமிட்டி உறுப்பினர் (BLC) என பூத் கமிட்டி, 20 முதல் 25 ஆயிரம் வாக்காளர்களுக்கு ஒரு பொறுப்பாளர் மற்றும் உறுபினர்கள் ஆகியவற்றுக்கான தகுதியானவர்களை கண்டறிந்து நிரப்பி ஜனவரி 3ஆம் தேதிக்குள் பட்டியலை இறுதி செய்து மாவட்ட கழகத்திற்கு அனுப்பிட வேண்டும் என மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள், தங்களது அறிக்கையில் கூறியுள்ளனர்.

## தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கீதாஜீவன் வேண்டுகோள்!

தூத்துக்குடி, டிச. 18 -

தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கீதாஜீவன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க செயற்குழுக் கூட்டம் 20.12.2024 - வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணியளவில் கலைஞர் அரங்கம், தூத்துக்குடி யில் மாவட்ட அவைத்தலைவர் ஜி.செல்வராஜ் தலைமையில் நடைபெறுகிறது.



இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்கழகச் செயலாளர்கள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள அழைக்கிறேன்.

பொருள்: தி.மு.கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தூத்துக்குடி வருகை தருவது குறித்து.

கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### திருப்பத்தூர் கல்லல் பகுதிகளில்

## ரூ.13 கோடியில் பல்வேறு நலத்திட்ட பணிகள்!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்தார்!

சிவகங்கை, டிச. 18 -

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட தேவாரம்பூர் ,காட்டம்பூர் ஆகிய பகுதிமக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தின் கீழ் தீயணைப்பு மற்றும் மீட்புத்துறைகளின் சார்பில் ரூபாய்217.17 லட்சம் செலவில் புதிய தீயணைப்பு நிலையம் கட்டிட அடிக்கல் நாட்டு விழா கல்லல் ஒன்றியம் முத்துப்பட்டி பாகனேரி சாலையில் ரூபாய் 10.18 லட்சத்தில் சருகனி ஆற்றின் அருகே உயர் மட்ட குறுக்கு பாலம் ஆக மொத்தம் ரூபாய் 12கோடியே 95 லட்சத்தில் அடிக்கல் நாட்டு விழா, மற்றும் கல்லல் ஒன்றியம் அரண்மனை சிறுவயலில் ரூபாய் 6.50 லட்சத்தில் பயணிகள்நிழற்குடை திறப்பு விழா மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் தலைமையில் நடைபெற்றது.



பெஞ்சல் புயல் காரணமாக மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன் ஏற்பாட்டின் பேரில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆலோசனைப்படி, கடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மருதாடு, வெள்ளப்பாக்கம் ஆகிய ஊராட்சிகளை சேர்ந்த 2000 குடும்பத்தினருக்கு அரிசி, போர்வை, புடவை உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் நான்கு வாகனங்களில் அனுப்பி வைத்து அப்பகுதிகளைச் சேர்ந்த உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் அந்தந்த குடும்பத்தினருக்கு முழுமையாக நிவாரணப் பொருட்கள் சென்றடைய வேண்டும் என அறிவுறுத்தினார். இதில் கூட்டுறவு சங்கத் தலைவர் ஆதி பெருமாள், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், மாநகராட்சி கவுன்சிலர்கள் மகேஸ்வரி விஜயகுமார், சுமதி ரங்கநாதன், ஊராட்சித் மன்ற தலைவர்கள் மனோகர், தமிழரசி பிரகாஷ், துணைத் தலைவர் சாந்தி பழனிவேல், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் சுதாகர், முன்னாள் கவுன்சிலர் சேகர், ஆனந்த துரை, நிர்வாகிகள் சதீஷ், செந்தில், அய்யப்பன், அமர்நாத், மனோகர், ரஜினி, பீமன், பால்ராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

புதிய திட்டப் பணிகளை துவக்கி வைத்தும், முடிவுற்ற பணிகளை மக்களுக்கு அர்ப்பணித்து கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் சிறப்புரை யாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் திட்ட அலுவலர் திருமதி வானதி, மாவட்ட தீயணைப்பு அலுவலர் பொறுப்பு அப்பாஸ், உதவி தீயணைப்பு அலுவலர் செந்தில்குமார், ஒன்றிய குழு தலைவர்கள் எஸ்.சண்முக வடிவேல், திருமதி சொர்ணம் அசோகன்,கல்லல் ஒன்றிய குழு துணைத் தலைவர் நாராயணன், மாவட்ட கவுன்சிலர் ஏ.டி. என்.ரவி ஊராட்சி மன்ற தலைவர்கள் பெருமாள், அருண், ஒன்றிய கவுன்சிலர்ரேவதி நெடுஞ்செழியன், பேருராட்சி தலைவர் திருமதி கோகிலராணி நாராயணன், வட்டார வளர்ச்சி அலுவலர் ரத்தினவேல் , பொதுக்குழு உறுப்பினர் கரு.அசோகன், ஒன்றிய செயலாளர்கள் நா. நெடுஞ்செழியன்,, குன்னக்குடி சுப்பிரமணியன், ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார் உட்பட அதிகாரிகள் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

## கலைஞருக்கு ஒரு காணிக்கை!

கலைஞர் அவர்களின் முன்னோடியான சமூக நலத் திட்டங்களை கட்சி சார்பற்று அனைத்து மக்களும் கொண்டாட வேண்டியது அவசியம். இதில் இரண்டு முக்கியத் திட்டங்கள் பற்றி மனதில் தோன்றிக் கொண்டே இருந்தது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே சமூக நலனுக்காக தொலைநோக்கு சிந்தனையுடன் சிந்தித்து செயல்பட்டது ஆச்சரியம் அளிக்கிறது.



அந்தத் தொலைநோக்குத் திட்டங்களால் தமிழகம் இன்றுவரை பயன்பெற்று வருகின்றது. கண் ஒளி திட்டம் முதல் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர் மருத்துவ இல்லம் வரை ஆச்சரியம் கொள்ளும் அளவிற்கு பலபல திட்டங்கள். கண்புரை என்பது ஒரு வயதில் எல்லோருக்கும் வருவதுதான். அதற்குரிய அறுவை சிகிச்சை இல்லையென்றால் பார்வை இழப்பு எற்படும்.

எனது சிறு வயதில் பல முதியோர்கள் பார்வை இல்லாமல் இருப்பதைப் பார்த்து உள்ளேன். இரண்டு கண்களும் வெள்ளையாக மட்டுமே இருக்கும். அதை எங்கள் மதுரைப் பகுதியில் பூ விழுந்து விட்டது என்பார்கள். எண்பதுகளில் இப்படி பூ விழுந்த கண்களைப் பார்ப்பது அரிது.

இப்போது கண்புரை அறுவை சிகிச்சையை எந்த விதத் தயக்கமும் இல்லாமல் கிராமங்களில் கூட செய்து கொள்கிறார்கள். கண்புரை அறுவை சிகிச்சை என்பது எந்த அளவிற்கு அவசியமானது முக்கியமானது என்பதை நான் கண்புரை அறுவை சிகிச்சை செய்து கொண்ட போதுதான் தெரிந்து கொண்டேன். 1972 ஆண்டு இந்த முன்னோடித் திட்டத்தை கலைஞர் அவர்கள் கொண்டு வந்தது இலட்சக்கணக்கான மக்கள் கண்ணொளி பெற வழி வகுத்தது.




தொழுநோயால் பாதிக்கப்பட மக்களைப் பற்றி கவலை கொள்வோர் மிகவும் அரிதானவர்களே. தமிழகத்தில் வெளிநாட்டு கிருத்துவ மிசினரி கள் தங்களால் இயன்ற உதவியைச் செய்து வந்தனர். ஆனால் அவர்களால் குறிப்பிட்ட எல்லையில் மட்டுமே உதவ முடிந்தது.

**தொழுநோயால் பாதிக்கப்பட்ட மக்களைப் பற்றி மிகுந்த அக்கறை கொண்டவர்கள் என்று பார்த்தால் வரலாற்றில் இயேசு கிறிஸ்து, கண்முன்னால் வாழ்ந்து மரித்த சேகுவேரா, அன்னை தெரசா போன்ற ஒரு சில பெயரை மட்டுமே கூற முடியும். இந்த வரிசையில் கலைஞர் அவர்களின் பெயரும் சேர்க்கப்பட வேண்டும்.**

**ஒரு காலக் கட்டத்தில் பொது மக்களால் ஒதுக்கப்பட்டு தொழுநோயால் பாதிக்கப்பட்ட மக்கள் பிச்சை எடுத்து மட்டுமே உயிர்வாழும் நிலை இருந்தது. அப்படியான ஒரு சூழலில் தொழுநோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இல்லங்களை மாவட்டம் தோறும் உருவாக்கினார் கலைஞர். அங்கு மருத்துவமும் உணவும் அவர்களுக்கு வழங்கப்பட ஆவண செய்தார்.**

இதை இங்கு இப்போது ஏன் எழுத வேண்டும்?

என் மனைவி முத்துமீனாள் தனது 9 ஆம் வயதில் தொழுநோயால் பாதிக்கப்பட்டார். பள்ளியில் படித்துக் கொண்டு இருந்த சிறுமி. கன்னத்தில் இருந்த ஒரு சிறு தழும்பை ஆரம்ப சுகாதார நிலையத்தில் பார்க்கிறார்கள். (தமிழகம் முழுக்க ஆரம்ப சுகாதார நிலை யங்களை அமைத்ததும் கலைஞர் அவர்கள் தான் )

தொழு நோயின் அறிகுறி என்று அறிந்து , உடனடியாக மதுரை மாவட்டத்தில் அரும்பனூர் என்ற கிராமத்தில் கலைஞர் அவர்கள் தொடங்கிய தொழு நோய் இல்லத்தில் சேர்கிறார். அங்கு மருத்துவமும் உணவும் உண்டு, சில காலம் கழித்து அங்கிருந்த கண்காணிப்பாளரிடம் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை சொல்லி உள்ளார்.

கண்காணிப்பாளர் “ நான் எங்காவது படிப்பும் மருத்துவமும் ஒரே இடத்தில் இருக்குமா என்று பார்க்கிறேன்” என்று சொல்லி உள்ளார்.

ஒரு சில மாதங்களில் கும்பகோணத்தில் உள்ள Sacred Heart Hospital , ல் சேர உதவியுள்ளார் அங்கிருந்த கண்காணிப்பாளர்.

தொழுநோய் கண்டுபிடிப்பு முதல் திருமணம் வரையான பயணத்தை “ முள் “ என்ற நூலில் எழுதி உள்ளார் என் மனைவி முத்துமீனாள் . எழுதி பத்தாண்டுகளுக்குப் பிறகு 2008இல்- அது நூலாக்கம் பெற்றது.

முள் நூலின் ஆங்கில நூலாக்கம் செய்த போது முதன்முதலில் மருத்துவம் பெற்ற மதுரை அருகில் உள்ள அரும்பனூர் சென்று கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப் பட்ட கல்வெட்டு அருகில் இருந்து என் மனைவி முத்துமீனாள் புகைப்படம் எடுத்துக் கொண்டார். அதை ஆங்கில நூலிலும் வெளியிட்டோம்.

‘முள்’ நூல் இதுவரை 10 பதிப்புகள் தமிழில் வந்துள்ளது. ஆங்கில மொழிபெயர்ப்பு ஜப்பான் நாட்டின் நிப்பான் பவுண்டேஷன் நிதி உதவியால் வெளிவந்தது.. அந்த சந்தர்பத்தில் பத்திரிகை ஜாம்பவான் சின்னக் குத்தூசி அய்யா அவர்கள் கலைஞர் அவர்களுக்கு ஆங்கில நூலின் பிரதியை கொடுக்கச் சொன்னார். நானும் உடனடியாக கோபாலபுரம் சென்று சண்முகநாதன் அவர்களிடம் அய்யா சின்னக்குத்தூசி கலைஞர் அவர்களுக்குக் கொடுக்கச் சொல்லிக் கொடுத்தார் என்று சொல்லி சேர்ப்பித்தேன்.



– பவுத்த அய்யனார்

கலைஞர் அவர்களின் பார்வைக்குச் சென்றது பெருமைக்கு உரியதாக நினைத்தோம் .

திரைப்பட ஆளுமை திரு. கமல்ஹாசன் அவர்கள் ஆங்கில நூலை 2010 ஜனவரியில் இல் வெளியிட்டுச் சிறப்பித்தார். அந்த விழாவில் அய்யா சின்னக்குத்தூசி அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார். அய்யா அவர்கள் உடல்நலக் குறைவோடு இருந்த நேரத்திலும் விழாவில் கலந்து கொண்டது, எங்கள் மீது கொண்ட அய்யாவின் தீராத அன்பினால் மட்டுமே.

‘முள்’ நூலைப் படித்த பின்பு ஹைதராபாத்தில் இருந்து ஒரு வாசகி ஹிந்தியிலும் மொழிபெயர்த்து அனுப்பினார். ஆனால் அது இன்னும் நூலாக்கம் பெறவில்லை.

**தமிழகத்தின் முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் தமிழகத்தில் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு , மருத்துவ இல்லங்கள் தொடங்காவிட்டிருந்தால், என் மனைவி போன்ற இலட்சக்கணக்கானவர்களின் வாழ்க்கை என்னவாகி இருக்கும் என்று நினைக்கவே மனம் நடுங்குகிறது.**

கலைஞர் அவர்களின் திட்டம் மூலம் இலட்சக்கணக்கான மக்கள் பயன் பெற்று இருந்தாலும் , அதன் பயனாளி ஒருவரின் வாழ்க்கை தமிழிலும் ஆங்கிலத்திலும் பதிவாகி இருப்பது மிகவும் முக்கியம் என்று நினைக்கிறேன். அது கலைஞர் அவர்களுக்கு செய்யும் காணிக்கை.




நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா,கழக பவள விழா மற்றும் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா ஆகிய முப்பெரும் விழா நிகழ்வு மேலப்பாளையம் பஜார் திடலில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பங்கேற்று சிறப்புரையாற்றினார். உடன் அப்துல்வகாப் எம்.எல்ஏ. மாலைராஜா, சுரேஷ், தர்மன், பேச்சிபாண்டியன், கிரிஜா குமார், விஜிலாசத்யானந்த், முகமது அலி,ஆமினா சாதிக், சைபுதீன் உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.